

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (28.06.2024) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களுடன் உலகில் வேளாண்மை ஆராய்ச்சியில் முன்னோடியாக திகழும் அமெரிக்காவை சார்ந்த பெர்டிய, பல்கலைக் கழகத்திலிருந்து தமிழக வேளாண்மை வளர்ச்சிக்கு தேவையான தொழில் நுட்பங்களை பகிர்வதற்கும் மற்றும் புதிய கல்வி மற்றும் கூட்டு ஆராய்ச்சிக்கான கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் / அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, வேளாண்மை உழவர் நலத்துறை அரசு சிறப்பு செயலாளர் முனைவர் பொ.சங்கர், வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ். தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமாரவேல்பாண்டியன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர்.கீதாலட்சுமி, அமெரிக்கா, பெர்டியூ பல்கலைக்கழக உணவியல் துறை முதல்வர் முனைவர்.ஷெனாய் சிம்செக், வேளாண்மை மற்றும் உயிர் பொறியியல்துறை தலைவர் முனைவர்.ஹாலிஸ் சிம்செக், அமெரிக்கா பெஸ்ட் கியூர் பவுண்டேஷன் நிறுவனர் முனைவர். கிருஷ்ணன் சுதந்திரன், உலக வியூக கூட்டமைப்பு தலைவர் முனைவர்.விஜய்பிரபாகர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மழை: கூடலூர், பந்தலூர் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை!

பந்தலூர், ஜூன் 30-

பந்தலூரில் 298 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் நேற்று (சனிக்கிழமை) பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. உதகை குன்னூர் கோத்தகிரி குந்தா பகுதிகளில் மழையின்தாக்கம்குறைந்துள்ள நிலையில், கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதியில் கனமழை தொடர்ந்து பெய்து வருகிறது. குறிப்பாக பந்தலூரில் அதிக கன மழை பெய்துள்ளது.

நேற்று (சனிக்கிழமை) காலை நிலவரப்படி கடலூரில் 298 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

பந்தலூரில் அத்திக்குன்னா வழியாக கூடலூர் செல்லும் சாலையில் மூன்று இடங்களில் பெரிய அளவிலான மண் சரிவு ஏற்பட்டது. அந்த வழியாக, உப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருந்தாளுனர் நிஷா, அவரது மகன் ஜோஸ், நண்பர் ஆல்வின் ஆகியோர் காரில் வந்த போது, மண் சரிவில் கார் தேயிலை தோட்டத்திற்குள் இழுத்துச் செல்லப்பட்டது. அதிர்ஷ்டவசமாக மூன்று பேரும் காயங்களுடன் தப்பினர். அவர்களை அங்கிருந்தவர்கள் மீட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பினர்.

## விக்கிரவாண்டி இடைத்தேர்தல் - காணை தெற்கு ஒன்றிய - தேர்தல் பொறுப்பாளர்

# பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் - திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - டாக்டர் இரா. இலட்சுமணன் எம்.எல்.ஏ. சுற்றுப்பயண விவரம்!

| தேதி | ஊராட்சி | ஊராட்சி பொறுப்பாளர்கள் | நேரம் | பாக எண் |
|---|---|---|---|---|
| 29.6.2024 | கல்பட்டு | மு.மதிவாணன் | ஐந்து பாகத்தில் தேர்தல் பணிமனை திறப்பு விழா மாலை 05.00மணி | 69,70,71 |
| | சிறுவாக்கூர் | | | 72,73 |
| 30.6.2024 | மாம்பழப்பட்டுகாலனி மாம்பழப்பட்டு ஒட்டன்காடுவெட்டி | சு. முத்துசாமி எஸ்.கல்யாணசுந்தரம் பூண்டி கலைவாணன் | காலை 7.00 மணி | 63, 68 64, 65 66, 67 |
| 30.6.2024 | மல்லிகைப்பட்டு / கோழிப்பட்டு காலனி கோழிப்பட்டு / கொண்டியங்குப்பம் / கூடலூர் / டட் நகர் | சு. முத்துசாமி ந. சிற்றரசு | மாலை4.00மணி | 63 61,62 58,59 |
| 1.7.2024 | கருங்காலிப்பட்டு / கருங்காலிப்பட்டு காலனி / காணை காலனி / வைலாமூர் / குப்பம் காலனி / குப்பம் | பத்மநாபன் துரை.சந்திரசேகர் கௌதமன் | மாலை4.00மணி | 74,75 126,127,128,129 124,125 |
| 2.7.2024 | காங்கேயனூர் காலனி / காங்கேயனூர் / பொன்னங்குப்பம் / பள்ளியந்தூர் காலனி / பள்ளியந்தூர் | கோவிந்தராஜ் அண்ணாதுரை | காலை 7.00 மணி | 76,77 78, 79 |
| 2.7.2024 | வீரமூர் / புதுப்பாளையம் / கெடார் மெயின் ரோடு / கெடார் ஊர் / கெடார் காலனி / பொன்னங்குப்பம் | ந. சிற்றரசு மா.சுப்ரமணியன் | மாலை4.00மணி | 86,87,88 80,81,82,83,84 |
| 3.7.2024 | சிறுவாக்கூர் காலனி / சிறுவாக்கூர் / ராகவன்பேட்டை / சௌரிநாயக்கன்பேட்டை / கல்பட்டு காலனி / கல்பட்டு / நத்தமேடு / புதூர் | மு.மதிவாணன் | காலை 7.00 மணி | 72,73 69,70,71 |
| 4.7.2024 | கோழிப்பட்டு மல்லிகைப்பட்டுமாம்பழப்பட்டு கல்பட்டு சிறுவாக்கூர் மாம்பழப்பட்டு | சு. முத்துசாமி எஸ்.கல்யாணசுந்தரம் பூண்டி கலைவாணன் மு.மதிவாணன் | வேட்பாளர் வாக்கு சேகரித்தல் காலை 7.00 மணிமுதல் இரவு10.00மணி வரை | 61,62,63,68,69,70,71,72,73,64, 65,66,67 |
| 5.7.2024 | கல்பட்டு | மு.மதிவாணன் | காலை 7.00 மணி | 69 இல்லந்தோறும் சென்று வாக்குச் சேகரித்தல் |
| 5.7.2024 | சிறுவாக்கூர் | மு.மதிவாணன் | மாலை4.00மணி | 73 இல்லந்தோறும் சென்று வாக்குச் சேகரித்தல் |
| 6.7.2024 | கல்பட்டு | மு.மதிவாணன் | காலை 7.00 மணி | 71 இல்லந்தோறும் சென்று வாக்குச் சேகரித்தல் |
| 6.7.2024 | உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் | | மாலை 4.00 மணிமுதல் இரவு10.00மணி வரை | |
| 7.7.2024 | கல்பட்டு | மு.மதிவாணன் | காலை 7.00 மணி | 70 இல்லந்தோறும் சென்று வாக்குச் சேகரித்தல் |
| 7.7.2024 | சிறுவாக்கூர் | மு.மதிவாணன் | மாலை 4.00 மணி | 72 இல்லந்தோறும் சென்று வாக்குச் சேகரித்தல் |
| 8.7.2024 | காணை தெற்கு ஒன்றிய அனைத்து ஊராட்சிகளில் வாக்குச் சேகரித்தல் | | காலை 7.00 மணிமுதல் மாலை05.00மணி வரை | |

# கள்ளச்சாராய சாவை வைத்து கபட நாடகமாடுகிறார் எடப்பாடி!

## முக்குலத்தோர் புலிப்படைக்கட்சித் தலைவர் நடிகர் சே.கருணாஸ் சாடல்!

சென்னை, ஜூன் 30-

முக்குலத்தோர் புலிப்படைக் கட்சி தலைவர் சே.கருணாஸ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கள்ளச்சாராய உயிரிழப்பை வைத்து கடந்த சில நாட்களாக எட்டப்பர் எடப்பாடியார் நடத்தும் கள்ள நாடக காட்சிகள்.. சட்டசபையில் தொடங்கி உண்ணாவிரதம் பந்தல் வரை சகிக்க முடியவில்லை! தமிழ்நாட்டின் அத்தனை உரிமைகளையும் பா.ஜ.க. அரசு பிடுங்கிய போது, எடப்பாடி தமிழ்நாட்டு உரிமை மீட்க ஒரு நாளும் உண்ணாவிரதம் இருந்ததில்லை. தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் வீதிக்கு வந்து போராடிய போது அவர்களை கொத்துக் கொத்தாக கொன்றொழித்துவிட்டு தொலைக்காட்சியில் பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று சொன்னவராச்சே! இது மட்டுமா.. எத்தனையோ.. அத்தனை தகிடுத்தத்தங்களையும், மறந்துவிட்டு இன்று உண்ணாவிரத நாடகமாடுகிறார் எடப்பாடி!

சட்டமன்றத்தில் எத்தனையோ மக்கள் பிரச்சினைக்கு பேசாது மௌனமாய் இருந்த எதிர்க்கட்சி எடப்பாடி. இன்று கள்ளக்குறிச்சிக்கு காவடி ஆடுகிறார். அவர் ஆட்சியில் இருந்தபோது, சபாநாயகர் தனபாலை வைத்து என்னென்னவெல்லாம் செய்தார் மறந்து விட்டார் போல! எத்தனை முறை மக்கள் பிரச்சினையை பேச வந்த தி.மு.க.வை சட்டமன்றத்திலிருந்து வெளியேற்றினார்! அதுவும் மறந்துவிட்டார் போல, எல்லாம்.. நாடகம்!! எடப்பாடி செய்வது அரசியல் நாடகம்தான் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்!

அரசு இந்தக் கள்ளச்சாராய உயிரிழப்பை வைத்து எடப்பாடி பழனிசாமியும், பா.ஜ.க.வும் ஆதாய அரசியல் செய்கின்றனர். கள்ளச்சாராய மரணங்கள் கொடுமையிலும் கொடுமைதான்! தமிழ்நாடு அதற்குரிய தக்க நடவடிக்கைகளை உடனுக்குடன் செய்தது; செய்கிறது! கள்ளக்குறிச்சி சம்பவம் நடந்த உடனேயே நீதி விசாரணை மற்றும் சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. பல அதிகாரிகள் மாவட்ட ஆட்சி தலைவர்கள் என இடமாற்றம் செய்யப்பட்டார்கள்; நீக்கப்பட்டார்கள்; கள்ளச்சாராய தொடர்புடையோர் கைது செய்யப்பட்டனர். ஆனால் கள்ளக்குறிச்சி விவகாரம் குறித்து விவாதிக்க ஒத்துழைக்காமல், திசை திருப்பும் அரசியலை கையில் எடுத்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்படியார் நாடகமாடுகிறார்.

கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து உண்மையாகவே எடப்பாடி விவாதிக்க தயாராக இல்லை. ஆனால் கள்ளக்குறிச்சி உயிரிழப்புகளை வைத்து திட்டமிட்டு அரசியல் செய்கின்றார். ஏன்? எடப்பாடி ஆட்சியில் கள்ளச்சாராய மரணங்கள் நிகழவில்லையா? அதற்காக நான் கள்ளக்குறிச்சியை ஞாயப்படுத்தவில்லை! அதிமுக ஆட்சியில் நடந்த கள்ளச்சாராய மரணங்கள் மூடி மறைக்கப்பட்டன. ஆனால் இப்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன! 2001ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில், கடலூர் மாவட்டம் பன்ருட்டியில் 53 பேர் உயிரிழந்தனர். 200 பேரின் பார்வை பறிபோனது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் கள்ளச்சாராயம் ஒழிந்ததா? அப்போதெல்லாம் எங்கிருந்தார் எடப்பாடி?



பா.ஜ.க. ஆட்சி செய்த குஜராத் மாநிலத்தில் ஏழெட்டு ஆண்டுகளில் பல்வேறு சம்பவங்கள் நடந்தேறின. ஒவ்வொரு முறையும் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அந்த மாநில முதல்வர்களை பதவி விலகக்கோரி யாரும் கூறவில்லை. அதேபோல் அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த மரணங்களுக்கு யாரும் பதவி விலகுமாறு கூறவில்லை. ஆனால் எடப்பாடிக்கு பழனிச்சாமிக்கு முக ஸ்டாலின் பதவி விலக வேண்டும் என்ற அற்ப ஆசை தலைக்கு ஏறுவது தான் ஏன் என்று தெரியவில்லை?? இது என்ன தர்ம ஞாயம்!

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால், குற்றவாளிகளைக் காப்பாற்ற முயற்சித்திருந்தால் சி.பி.ஐ. விசாரணை கூட கேட்கலாம் தவறில்லை. ஆனால், அனைத்து நடவடிக்கைகளும் எடுத்ததை பார்த்த பிறகும், சி.பி.ஐ. விசாரணைக்கு கேட்கிறார் என்றால், அதுதான் எடப்பாடியின் அரசியல் நாடகம்!

அ.தி.மு.க.வின் தொடர் தோல்வியை மூடிமறைக்க எடப்பாடி காட்டும் கபட நாடக வித்தை இது! எடப்பாடி பழனிசாமியிடம் அ.தி.மு.க. வந்த நாளிலிருந்து அ.தி.மு.க. சந்தித்த தேர்தல்கள் அனைத்திலும் தோல்வி! அதனால்தான், 'தேர்தல் நேர்மையாக நடக்காது' என்று சொல்லி விக்கிரவாண்டி இடைத் தேர்தலைப் புறக்கணித்திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி! ஆடத் தெரியாதவளுக்கு வாசல் கோணல் கதைதான்!

இவரது தேர்தல் புறக்கணிப்புக்குப் பின்னால் இரண்டு சூழ்ச்சிகள் இருக்கின்றன. ஒன்று, அ.தி.மு.க. போட்டியிட்டால் நிச்சயம் தோற்றுப் போகும். எனவே அந்தத் தோல்வி முகத்தை மறைக்கலாம் என்பது இன்னொன்று தனது எஜமானன் ரகசிய உறவாளன் பா.ஜ.க.வின் வேட்பாளருக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்து தனது அடிமை விசுவாசத்தைக் காட்டிக் கொள்வது! வேறென்ன காரணம் இருக்க முடியும்!!??

பா.ஜ.க.வின் பத்தாண்டு கால பாசிச அழிவு நடவடிக்கைகள் அனைத்துக்கும் துணை போன கட்சி அ.தி.மு.க. சிறுபான்மை இசுலாமிய இன மக்களுக்கும், ஈழத் தமிழ் மக்களுக்கும் பச்சைத் துரோகம் இழைத்தது அ.தி.மு.க. தமிழ்நாட்டு மக்கள் மறக்கமாட்டார்கள். இதேபோல்தான் பா.ஜ.க.வின் அனைத்து மக்கள் விரோதச் சட்டங்களுக்கும் ஆதரவாக இருந்தது செயல்பட்ட ஒடிசா நவீன் பட்நாயக்கும், ஆந்திரா ஜெகன் மோகன் ரெட்டியும் தோற்கடிக்கப்பட்டார்கள் என்பதை அ.தி.மு.க., மறந்துவிடக் கூடாது.

மக்களுக்கான அரசியலை செய்ய எடப்பாடி கற்றுக்கொள்ளட்டும்.. சந்தடி சாக்கில் சந்தியா ராகமெல்லாம் பாடி மக்களை ஏமாற்றமுடியாது.. மக்கள் விழித்துக் கொண்டுவிட்டார்கள்! எடப்பாடி செய்வது கபட நாடகம்தான் என்பது மக்களுக்கு தெளிவாக புரியும்!

இவ்வாறு சே. கருணாஸ் அறிக்கையில் கூறியுள்ளார்.




ஈரோடு தெற்கு மாவட்ட பா.ஜ.க. செயலாளர் விஸ்வபாலாஜி மகன் வி.பி.விக்னேஷ் ஈரோடு தெற்கு மாவட்ட கழக இளைஞரணி சார்பில் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கையின் போது பெரியசேமூர் பகுதி மற்றும் 11 வது வட்டத்தில் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் முன்னிலையில் இளைஞரணியில் இணைந்தார். நிகழ்வில் 11வது வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இரா.நித்தின், ரமேஷ், மணி சிவா, ஜாகிர், சதாம், இளங்கோ, பிரனேஷ், ஆஷிக், கவியரசு, தங்கவேல் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## ரத்து செய்யப்பட்ட யுஜிசி நெட் தேர்வு

# புதிய தேதியை அறிவித்தது தேசிய தேர்வு முகமை!

சென்னை, ஜூன் 30-

NCET, UGC NET தேர்வுகளுக்கான புதிய கால அட்டவணையை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது. நாட்டின் பல்கலைக்கழகம், கல்லூரிகளில் உதவி பேராசிரியராக பணிபுரியவும், இளநிலை ஆராய்ச்சி படிப்புக்கான மத்திய அரசின் உதவித் தொகையைப் பெற யு.ஜி.சி நெட்(UGC NET) தேர்வு அவசியம் இதில் தேர்ச்சி பெற்றால் தான் மேற்கூறிய சலுகைகள் கிடைக்கும். ஆண்டு தோறும் தேசிய தேர்வுகள் முகமை சார்பில் இரண்டுமுறை நெட் தேர்வு நடைபெறும் நிலையில் முதற்கட்டமாக கடந்த ஜூன் மாதம் நடைபெற்றது.

9 லட்சத்திற்கும் மேற்பட்டோர் தேர்வு எழுதிய நிலையில், இந்த தேர்வை ரத்து செய்து மத்திய கல்வி அமைச்சகம் உத்தரவிட்டது. இந்நிலையில் ரத்து செய்யப்பட்ட யுஜிசி நெட் தேர்வு தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆக.21 ஆம் தேதி முதல் செப்.4 ஆம் தேதி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே நடைபெற்ற எழுத்துத் தேர்வு இம்முறை, கணினி வழியில் நடைபெறும். சிஜஎஸ்ஆர்யுஜிசி நெட் தேர்வும் ஜூலை 25 முதல் 27ஆம் தேதி வரை நடைபெறும். என்சிஈடி தேர்வு, ஜூலை 10 ஆம் தேதி நடைபெறும்என்று தேசியத் தேர்வு முகமை அறிவித்துள்ளது.



திருத்துறைப்பூண்டி அருகே நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவில் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணியின் சார்பில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.வினோத்குமார் ஏற்பாட்டில் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களை மாநில இளைஞரணி துணை செயலாளர் நா. இளையராஜா வழங்கினார் .மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பாஸ்கர், ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் பரமேஸ்வரா, ஸ்ரீதர்,முருகானந்தம், ஒன்றிய மாணவரணி நிர்வாகி புஷ்பராஜ், முன்னாள் தகவல் நுட்ப அணி தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் சி.எஸ்.சிவகுமார், பொன் மாணிக்கம், சேகல் இளையராஜா உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.